ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் நிலைத்து நின்று – பெருமைகள் நிலைபெறும் வகையில்

# புதிய தொழில் நுட்பத்துடன் கட்டுமானப் பணிகள் நடைபெற வேண்டும்!

## இந்திய கட்டடங்கள் கூட்டமைப்பின் கருத்தரங்கில் அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தல்!

சென்னை, பிப்.17-

சென்னை, அண்ணா சாலை, ஹையாத் ரீஜென்சியில் நடைபெற்ற இந்திய கட்டடக் கூட்டமைப்பின் 5வது செயற்குழு கூட்டம் மற்றும் தொழில் நுட்ப கருத்தரங்கத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.



தமிழ்நாடு அரசின் பொதுப் பணித்துறையும், இந்தியக் கட்டடங்கள் கூட்டமைப்பும் இணைந்து, இந்திய கட்டடங்கள் கூட்டமைப்பின் 5வது செயற்குழுக் கூட்டம் மற்றும் ஒரு நாள் கருத்தரங்கம், சென்னை அண்ணா சாலை, ஹையாத் ரீஜென்சில் நேற்று முன்தினம் (15.2.2025) நடைபெற்றது. பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமை விருந்தினராகப் பங்கேற்றார்.

பொதுப்பணித்துறை அரசுச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிவண்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

புதுடெல்லி இந்திய கட்டடக் கூட்டமைப்பின் தலைவர் சி.தேப்நாத் தலைமையில் நடைபெற்ற இச்செயற்குழுக் கூட்டத்தில், இந்திய கட்டடக் கூட்டமைப்பின் நிறுவன பொறியாளர் ஓ.பி.கோயல், இந்திய கட்டடக் கூட்டமைப்பின் நிர்வாக இயக்குநர் இந்தர்ஜித் சித்து மற்றும் இந்திய கட்டடக் கூட்டமைப்பின் தமிழ்நாடு மாநில கிளையின் தலைவர் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் எ.வ.வேலு ஆற்றிய உரை வருமாறு:-

மாநாட்டிற்கு வருகைபுரிந்துள்ள இந்திய அளவில் கட்டடக் கட்டுமானங்களைப் பொறுப்பேற்றுச் சிறப்பாகக் கட்டுவதன் மூலம் இந்தியக் கட்டடக் கலைக்குப் பெருமைகள் சேர்த்திடும் பெருமைக்குரியப் பொறியாளர்கள் அனைவரையும், திராவிட மாடல் அரசின் நிறுவனர் - முதலமைச்சர் திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் சார்பாக, வரவேற்கிறேன்.

இன்றைய உலகை வடிவமைக்கும் மிக சக்திவாய்ந்த சக்திகளில் தொழில்நுட்ப வளர்ச்சியும் ஒன்றாகும். தொழில்நுட்ப வளர்ச்சி பரிணாமம் குறைந்த நேரத்தில் நிறைய சாதிப்பதை சாத்தியமாக்கியுள்ளது. கடந்த காலத்தில் மக்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ள கடிதங்கள் எழுதுவார்கள், இன்று தொழில்நுட்பம் காரணமாக, பாரம்பரிய கடிதங்கள் மின்னஞ்சல்கள் மற்றும் மொபைல் போன்களால் மாற்றப்பட்டு உள்ளன. இந்த முழு உலகமும் தொழில்நுட்ப வளர்ச்சியும் அடிப்படையாகக் கொண்டது, நம் கைகளில் உள்ள போன்கள் முதல் செயற்கை நுண்ணறிவின் முன்னேற்ற ங்கள் வரை, தொழில்நுட்பம் நம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. இது உலகளவில் நம்மை இணைக்கிறது.

### சமூகம் முன்னேற தொழில்நுட்பம் முக்கியம்!

நாம் முன்னேறும்போது, ஒட்டுமொத்த சமூகத்திற்கும் பயனளிப்பதை உறுதி செய்ய, தொழில்நுட்ப வளர்ச்சியை பொறுப்புடனும், நெறிமுறை, உள்ளடக்கிய மற்றும் நிலையான வழிகளில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது முக்கியம். புதிய கட்டிடங்களை கட்டுதல் சாலைகள் அமைத்தல் போன்ற பல்வேறு உள்கட்டமைப்புகளை மக்கள் பயன்பாட்டிற்கு நவீன தொழில் நுட்ப கட்டுமான பொருட்களை பயன்படுத்தி எதிர்வரும் காலங்களில் செயல்படுத்தப்பட வேண்டும்.

தமிழ்நாடு, திராவிடக் கட்டடக் கலை மாண்புகளைப் பறைசாற்றும் கருவூலம்! நம் நாடு சுதந்திரம் அடைந்தபின் முன்னேற்றமடைந்துள்ள அதிநவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்றி அதிநவீன கருவிகளைப் பயன்படுத்தி பிரம்மாண்டமான கட்டடங்கள் பல கட்டப்படுகின்றன. ஆனால், எந்தவித நவீன எந்திர வசதிகளும் இல்லாத பழங்காலத்தில் கட்டப்பட்டுள்ள பல பிரம்மாண்டமான கட்டடங்கள் நம் நாட்டிற்குப் பெருமைகள் சேர்க்கின்றன என்று தெரிவித்தார்.

### திராவிட கட்டடக் கலையின் பிரமாண்டங்கள்!

தமிழ்நாட்டின் அரசு முத்திரையில் திருவில்லிபுத்தூர் கோவில் கோபுரம் இடம் பெற்றுள்ளது. அது தமிழ்நாட்டுக் கட்டடக் கலையின் சிறப்பை நமக்குக் காட்டுகிறது. அது போல, தமிழ்நாட்டில் பல பிரம்மாண்டமான கோயில்கள் உள்ளன. மதுரை மீனாட்சியம்மன் திருக்கோவில், திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயம், கடலுக்கு நடுவே ஒரு தீவு நகரமான இராமேஸ்வரத்தில் கட்டுமானப் பொருட்கள் எங்கிருந்து எப்படி எடுத்துச் செல்லப்பட்டதோ என்பதை அறிய இயலாத வகையில் கட்டப்பட்டுள்ள இராமநாதசுவாமி திருக்கோவில், 1100 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மாமன்னர் இராஜராஜ சோழன் கட்டிய தஞ்சை பெரியகோவில், அவருடைய வீரமகன் மாமன்னர் இராஜேந்திர சோழன் கட்டிய கங்கைக் கொண்ட சோழபுரம் கோவில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவரங்கம் ரங்கநாதர் திருக்கோவில் என பல கோயில்கள் திராவிடக் கட்டடக் கலையின் பிரம்மாண்டங்களை, பெருமைகளை நமக்கு உணர்த்தும் கலைக் களஞ்சியங்கள் என்று எடுத்துரைத்தார்.

இந்த மரபில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சென்னை மாநகரில் கட்டிய வள்ளுவர் கோட்டம், தமிழ்நாடு முதலமைச்சர் - திராவிட நாயகர் கட்டியுள்ள கிண்டி பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம், தமிழர்களின் பண்பாட்டுச் சின்னம் ஏறு தழுவுதல் அரங்கம், கலைஞர் நினைவிடம் எல்லாம் கட்டப்பட்டுள்ளன. இத்தகைய மாபெரும் கட்டடங்கள் நிறைந்துள்ள தமிழ்நாட்டில், இந்திய நாடு முழுவதிலும் இருந்து கட்டடக் கலைப் பொறியாளர்கள் அனைவரும் வந்து கூடியிருப்பது மிகவும் பொருத்தமாகும்.

### பல்வேறு தலைப்புகளில் விவாதங்கள்!

இன்று காலை முதல் நடைபெற்று வரும் இந்த மாநாட்டில் பல்வேறு கட்டடக்கலை தொடர்பான பல பொருள்கள் குறித்து விவாதங்கள் நடைபெற்றுள்ளதாக அறிகிறேன். இந்த விவாதத்தில் கட்டுமான ஒப்பந்த மேலாண்மை குறித்து திரு. மாயங் திலக், CPWD (ஓய்வு), புதுதில்லி அவர்கள், கட்டடங்கள் மறுசீரமைப்பு குறித்து R.K.மஜூம்தார், IAS (ஓய்வு), உயரமான கட்டட வடிவமைப்பு குறித்து சத்தியவானி பிராஜக்ட்ஸ் இயக்குநர் P.சூர்யபி ரகாஷ், புதுமையான மற்றும் செலவு குறைந்த கட்டுமான பொருட்கள் குறித்து பொதுப்பணித்துறை கண்காணிப்புப் பொறியாளர் C.பாலமுருகன், கட்டட அடித்தள வடிவமைப்பு & கட்டுமானத்திற்கான தொழில்நுட்பம் குறித்து UCONPT ஸ்டரக்சுரல் சிஸ்டம் தொழில்நட்ப இயக்குநர் டி.பி. மகேஸ்வரன், 3D பிரிண்டிங் மூலம் வருங்கால கட்டுமான துறை குறித்து Tvasta மென்பேக்சரிங் சொலியூசன் எஸ்.அஸ்வீன், சூற்றுச்சூழல் தாக்கத்தால் கட்டடத்தில் ஏற்படும் தாக்கங்கள் கான்சம் லேப்ஸ் எஸ்.ஹரிஹரன் என 7 தலைப்புகளில் கருத்தரங்கம் நடைபெற்று பொறியியல் துறை ஆலோசனைகளையும், வழிகாட்டி நெறி முறைகளையும் எடுத்துரைத்து உள்ளனர் என்று பாராட்டுகளைத் தெரிவித்தார்.

### குறைந்த செலவு - நிறைந்த தரம்!

மேலும், கட்டுமானங்களைப் பொறுத்த வரை; திட்டமிட்டவாறே நிறைவேற்றி முடித்திடல் வேண்டும். இதைப் பொறியாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். குறைந்த செலவு - நிறைந்த தரம் - கட்டடத் தோற்றப் பொலிவு - நீண்டகாலப் பயன்பாடு - இவை எல்லாம் கட்டுமானத்தின் முக்கிய அம்சங்களாகக் கவனிக்கப்பட வேண்டியவை. இவற்றையெல்லாம் பொறியாளர்கள் கருத்தில் கொண்டு, முறையாகத் திட்டமிட்டு - உரிய அனுமதிகளை எல்லாம் அரசிடம் பெற்றுப் பணிகளை துவக்கிட வேண்டும். கட்டுமானப் பொருள்களின் தரம் குறித்து ஒவ்வொரு நிலையிலும் ஆய்வு செய்து - பொருள்களைப் பயன்படுத்திட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

புதிய தொழிற் நுட்பத்தை அனைத்து கட்டுமானப் பணிகளிலும் கடைப்பிடிக்க வேண்டும். இனிவருங்காலங்களில் நடைபெறும் கருத்தரங்குகளில் பாரம்பரிய கட்டடங்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கை சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்கப்படுகிறது. அதில் மூலதன செலவினம், நிர்வாக செலவினம் என்று பல்வேறு தலைப்புகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மூலதன செலவினை செய்யும் துறையாக பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையும் உள்ளன. அரசால் உருவாக்கப்படும் கட்டடங்கள் மற்றும் சாலைகள் மூலதனங்களாக உள்ளன.

கட்டுமான பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் விரைந்து முடிக்க வேண்டும். தாமதமாக பணிகள் முடிக்கும் பட்சத்தில், கட்டுமான செலவினம் உயர்ந்து விடும். கட்டுமான பணிகளில் தரத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். 3D டெக்னாலஜி பயன்படுத்தி கட்டுமானங்கள் உருவாக்கிட வேண்டும்.

தமிழ்நாட்டில் விவசாயத் தொழில் வளம் பெருகக் காரணமாக இருப்பது காவிரி ஆறு. தமிழ்நாட்டின் சங்க கால இலக்கியமான பட்டினப்பாலையில்;

**“வான் பொய்ப்பினும் தான் பொய்யா**
**மலைத் தலைய கடற்காவிரி**
**புனல்பரந்து பொன் கொழிக்கும்”**

### உலகில் எங்கும் காணப்படாத கல்லணையின் கட்டுமானம்!

வளம் நிறைந்தது தமிழ்நாடு எனக் காவிரியைப் புகழ்ந்து பாடும், இந்தப் பட்டினப் பாலை இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. இப்பாடலில் கூறப்படும் காவிரியாற்றின் வரலாறும் மூவாயிரம், நான்காயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. இந்தக் காவிரியாற்றில் விவசாயப் பணிகள் சிறக்க - திருச்சி மாநகரின் கீழ்ப்புறத்தே - இன்றைய தஞ்சை மாவட்ட எல்லைக்கு அருகே - ஓர் அணை கட்டப்பட்டுள்ளது - இந்த அணையும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டை ஆண்ட சோழ மாமன்னன் கரிகாலனால் கட்டப்பட்டது.

அந்த அணை இன்றளவும் தஞ்சை டெல்டா மாவட்டப் பாசனத்திற்குப் பயன்படுகிறது. இந்த அணையைப் பார்வையிட்ட ஆர்தர் காட்டன் என்ற ஆங்கிலேயப் பொறியாளர் இந்த அணையின் கட்டுமானம் குறித்து ஆய்வு செய்துள்ளார். இந்தக் கல்லணையின் கட்டுமானத் தொழில்நுட்பம் உலகில் எங்கும் இதுவரை காணப்படாத அற்புதமான தொழில்நுட்பம் என உணர்ந்து, வியந்து “What a grand this one” என ஆச்சரியப்பட்டுள்ளார். அது முதல் அந்தக் கல்லணை “Grand Anaicut” என்றே அழைக்கப்படுகிறது.

### கட்டுமானங்கள் நிலைத்திருக்க வேண்டும்!

பொறியாளராகப் பணிபுரிவது பெரிதல்ல, எந்த நிலையிலும் எடுத்த காரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றிப் பெருமிதம் கொள்ள வேண்டும் என்னும் உணர்வும் ஊக்கமும் எல்லோருக்கும் ஏற்பட வேண்டும். இந்த அரங்கில் கூடியுள்ள பொறியாளர்கள் அனைவரும் ஜான் பென்னி குயிக் போல நினைத்ததை முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர்களாகத் திகழ வேண்டும். நீங்கள் வடிவமைத்துக் குறித்த காலத்தில் கட்டி முடிக்கும் கட்டடங்கள் எல்லாம் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் நின்று பெருமைகள் நிலைபெறும் வகையில் - பணி சிறக்க அனைவருக்கும் - தமிழ்நாடு அரசு சார்பிலும் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சார்பிலும், இந்தப் பொறியாளர்கள் மாநாட்டை தமிழ்நாட்டில் நடத்திட முன்வந்த பெருமக்களுக்கும், மாநாடு அனைத்து வகையிலும் வெற்றிகரமாக நடைபெற ஓய்வின்றி உழைத்த தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை பொறியாளர் பெருமக்களுக்கும், மனமார்ந்த நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

இக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை அரசுச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், இந்திய கட்டடக் கூட்டமைப்பு தமிழ்நாடு மாநில கிளை தலைவர் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிவண்ணன், பொதுப்பணித்துறை சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் எஸ்.மணிகண்டன், பொதுப்பணித் துறை பொறியாளர்கள் மற்றும் இதர பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

## எடமச்சி - பொற்பந்தலில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கும் பணி க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

காஞ்சிபுரம், பிப். 17-

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், சால வாக்கம் அடுத்த எடமச்சி, பொற்பந்தல் ஆகிய ஊராட்சி களின் மையப் பகுதியில் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் நெல் கொள்முதல் நிலையத்திற்கான நெற்களம் மற்றும் தானி யக்கிடங்கு கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நடை பெற்றது.

அதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்பு அடிக்கல் நாட்டினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் டி.குமார், பி. சேகர், மாவட்ட கவுன்சிலர் சிவ ராமன், அறங்காவலர் குழு உறுப்பினர் வெங்கடேசன், ஊராட்சி மன்ற தலைவர்கள் தர்மராஜ், கார்த்தி, ஒன்றிய கவுன்சிலர் பி. சுப்பிரமணி, முரளி, ஒன்றிய நிர்வாகிகள் பால முருகன், அழகப்பன், நந்தா மற்றும் பாஸ்கர் உள்ளிட்ட துணைத் தலைவர்கள், மன்ற உறுப்பினர்கள் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்

‘வாட்ஸ் அப்’பில் வரும் செய்தி!




அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் – இரா.துரைராஜ் – எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில்

# 170-வது வட்டச் செயலாளர் கோட்டூர் சண்முகம் இல்ல மணவிழா வரவேற்பு

## அமைச்சர்கள் துரைமுருகன் – கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் – பி.கே.சேகர்பாபு – கோவி.செழியன் – முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

சென்னை, பிப். 17 -

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை கிழக்குப் பகுதி 170 வட்டச் செயலாளர் கோட்டூர் கோ.சண்முகம் இல்ல மணவிழா வரவேற்பு இன்று மாலை திருவான்மியூர் ராமச்சந்திரா கன்வென்ஷன் மகாலில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெறும் வரவேற்பு நிகழ்ச்சியில் கழகப் பொதுச் செயலாளர் - நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், உள்ளிட்ட அமைச்சர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

சென்னை , கோட்டூர், மேற்கு கால்வாய் கரை சாலை, நினைவில் வாழும் எம். கோபால் நலமுடன் ஜி.வீரம்மாள் தம்பதியரின் இளைய மகனும் 170 வட்டச் செயலாளர் சண்முகம் சகோதரர் கோ. ராஜன் (தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்) - சென்னை120, பட்டமத்திரி, டி.எச்.ரோடு, ஜி.ஏழுமலை ஈ.ராதா தம்பதியரின் இளைய மகளுமாகிய ஏ. ஆனந்தி அவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி இன்று (17.2.2025 - திங்கள் ) மாலை 6.30 மணிக்கு மேல் திருவான்மியூர், ராமச்சந்திரா கன்வென்ஷன் ஹாலில் மணமக்கள் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை தாங்கிட, பகுதிச் செயலாளர்கள் இரா. துரைராஜ் எம்.சி., எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. ஆகியோர் முன்னிலை வகித்தனர். 170 -வது வட்டச் செயலாளர் கோட்டூர் புரம் க.மணி, 170அ வட்ட பொருளாளர் பா.சிவலிங்கம் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மணவிழா வரவேற்பு நிகழச்சியில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், அமைச்சர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

மேலும் அமைச்சர்கள் பி. கே.சேகர்பாபு , கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன், கோ.வி.செழியன், மற்றும் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, ம.தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யா, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தலைவர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன், மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ்குமார்

சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி , ஏ.எம்.வி. பிரபாக ரராஜா, ஜெ.கருணாநிதி, ஏ.கிருஷ்ணசாமி, கோ. ஐயப்பன், வரலட்சுமி மதுசூதனன்,

பகுதிச் செயலாளர் நா.இராமலிங்கம், படப்பை ஐ.மனோகரன், காசி முத்துமாணிக்கம், க.தனசேகரன் எம்.சி., பாலவாக்கம் க.சோமு.வேளஞ்சே. எஸ். குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன் , வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி., வாசுகி பாண்டியன், ரத்னா லோகேஷ்வரன் எம்.சி.,

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அமைப்புச் செயலாளர் பெ.தமிழினியன், பகுதி - ஒன்றியச் செயலாளர்கள் கே.கண்ணன், மு.இராசா, பெருங்குடி எஸ்.ரவிச்சந்திரன். வி.இ. மதியழகன், அரிமா சு. சு.சேகர், துரை.கபிலன், நொளம்பூர் வே.ராஜன், அயப்பாக்கம் அ.ம. துரைவீரமணி, கோவிலம்பாக்கம் ஜி.வெங்கடேசன் , கே.ஏழுமலை, ஜி.ஆர். திருமலை, எம். எஸ்.கே. ரமேஷ்ராஜ், நந்தனம் மதி, எஸ்.முரளி,



தோழமை கட்சி முன்னணி நிர்வாகிகள் எம்.ஏ.முத்தழகன் (காங்.), இல.பாஸ்கரன் (காங்.), ப.சுப்பிரமணி (ம.தி.மு.க.), பெ.ரவிசங்கர் (வி.சி.க.), சைதை ம.ஜேக்கப் (வி.சி.க.), இரா. வேல்முருகன் (சி.பி.ஐ.),

பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், மின்னல் கந்தப்பன், மேடவாக்கம் ப.ரவி, எம்.கே.ஏழுமலை , உ.துரைராஜ், எஸ்.டி. தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், ஆர். பாலசுந்தரம், இரா.பாஸ்கர், இரா.செல்வகுமார், இரா.செல்வகுமார். நுங்கை வி.எஸ்.ராஜ், கோ.சு.மணி, தா.மோகன்குமார், ஏ..முருகேசன், லயன் வ.பாபு, கோல்டு டி.பிரகாஷ், கிண்டி சி.கே.கணேஷ் (காங்.), எஸ்.வி.குமார் (ம.தி.மு.க.), இ.வெங்கடசன் (சி.பி.ஐ.),

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சைதைசாதிக், அஞ்சல்ராமன், கழக த. ரமேஷ், மணிகண்டன் நாடிமுத்து, ம.ராஜேஷ், எம்.எஸ். அரிபாபு, கோ.பாஸ்கரன், பா. அருண்குமார், வே.ஆனந்தன், எம்.ஆர்.சசிக்குமார், சி.பரிமேலழகர், ம.பார்த்திபன், கனிமொழிதனசேகரன், எம்.விநாயகமூர்த்தி, ச.சங்கர்கணேஷ், ஜெ.இ.பாண்டியன், கா.வீ.தியாகராஜன், செ.ரவி,

பகுதி அணி நிர்வாகிகள் கொடி கே.பாலா, பா.பரத்குமார், ப.அருண்குமார், தி.கோகுலன், மே.குணா, ராஜாசம்பத், க.சுப்பிரமணி, எம்.ராமு, முகமதுரியாஸ்கான், கோ.முத்துசாமி, ஜெ.கௌசல்யா, எஸ்.அனுப்பிரியா, எஸ்.வினோத்குமார், கி. சிவக்குமார், எஸ். வினோத்குமார், எஸ்.வினோத்குமார். மு.செந்தில்வேல், மு.பாபு, எஸ். ரமேஷ், ஆர்.மணிகண்டன், ம.ராஜ்குமார், கே.கே.மோகன், இரா.சம்பத்குமார், இரா.மலர் விழி, சொ.முருகையன், ஆர். சுப்பிரமணி, த.மணி, ஜி. ஜே.மோசஸ், ஆர்.எஸ்.ரமேஷ், ஆர்.ஜி.கற்பகம், ஐ.கார்த்திக், எஸ். சரவணன், வழக்கறிஞர் மாரியப்பன், வைரவமூர்த்தி, இரா.பாபு , பி.டி.சி.குமார், பூ. பாஸ்கர், ஆர்.தனசேகரன், த. ஜெயராமன், வட்ட கழக நிர்வாகிகள் எஸ்.கர்ணன் எம். குமார் மு.பலராமன் ஏ.விக்டோரியா அன்பு ஆர்.நரசிம்மன் க.ராஜன் கே.பழனி கே.கோவிந்தராஜூலு ப.தினகரன் ,

கே.பன்னீர்செல்வம் , கே. அரிபாபு, எஸ்.ராஜா, ஜி. மேனகா , ஏ.கே.என்.உதயகுமார், பி.பூமிநாதன், எஸ்.பிரகாஷ், ஏ.கருணாகரன் ,ஆர்.நந்தகுமார் உள்ளிட்ட கழகத்தினர் வாழ்த்துகின்றனர்.

# மதுரை மேற்குத் தொகுதியை மீட்டெடுப்போம்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி உறுதி!

மதுரை, பிப். 17-

மதுரை வடக்கு மாவட்டம் மதுரை மேற்கு தொகுதி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றதில் மாவட்ட செயலாளரும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்று மதுரை மேற்கு தொகுதியை மீட்டெடுப்போம் என்றும் வரும் 23ஆம் தேதி தொகுதியின் பொது உறுப்பினர்கள் கூட்டம் வெகு சிறப்பாக நடைபெறும் எனவும் தெரிவித்தார். அதன் விபரம் வருமாறு:-

மதுரை வடக்கு மாவட்டத்தில் மதுரை மேற்கு தொகுதி சேர்க்கப்பட்டதை தொடர்ந்து வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி மதுரை மேற்கு தொகுதி கழக நிர்வாகிகளை சந்தித்து பல்வேறு ஆலோசனைகள் நடத்தினார்

இதை தொடர்ந்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர் கூறுகையில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் திராவிட மாடல் அரசை தமிழ்நாடு மக்கள் பாராட்டக்கூடிய வகையில் நடத்தி வருகிறார், கழக அரசின் சாதனைகள் எல்லோராலும் பாராட்டு பெற்று வருகிறது, தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்னிடம் மதுரை மேற்கு தொகுதியை ஒப்படைத்துள்ளார், அவரது நம்பிக்கையை காப்பாற்றும் வகையில் மதுரை மேற்கு தொகுதியை மீட்டெடுத்து தலைவர் அவர்களிடம் ஒப்படைப்பேன்.

மேலும் மதுரை மேற்கு தொகுதியில் பொது உறுப்பினர்கள் கூட்டம் வரும் 23.02.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் விளங்குடி ஏபிடி கம்பெனி அருகே முத்தமிழ் அறிஞர் கலைஞர் திடலில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் என அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுவதாக தெரிவித்தார்.

கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் தனச்செல்வம், மாவட்ட துணை செயலாளர் மூவேந்திரன், பகுதி செயலாளர்கள் அன்பழகன், மதிவெங்கடேஷ், காவேரி, தவமணி, சுதன், ஒன்றிய செயலாளர் ஆர்.கே.ஜெயராமன், பேரூர் செயலாளர் ராஜாமணி, மாநில அணிகளின் நிர்வாகிகள் அக்ரி கணேசன், ஆர்.கணேசன், வீரகணேசன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்



காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், சாலவாக்கம் அடுத்த எடமச்சி, பொற்பந்தல் ஆகிய ஊராட்சிகளின் மையப் பகுதியில் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் நெல் கொள்முதல் நிலையத்திற்கான நெற்களம் மற்றும் தானியக்கிடங்கு கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது அதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்பு அடிக்கல் நாட்டினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் டி.குமார், பி.சேகர், மாவட்ட கவுன்சிலர் சிவராமன், அறங்காவலர் குழு உறுப்பினர் வெங்கடேசன், ஊராட்சி மன்ற தலைவர்கள் தர்மராஜ், கார்த்தி, ஒன்றிய கவுன்சிலர் பி. சுப்பிரமணி, முரளி, ஒன்றிய நிர்வாகிகள் பாலமுருகன், அழகப்பன், நந்தா மற்றும் பாஸ்கர் உள்ளிட்ட துணைத் தலைவர்கள், மன்ற உறுப்பினர்கள் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்



மதுரை வடக்கு மாவட்டம் மதுரை மேற்கு தொகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் விளாங்குடியில் அமைந்துள்ள கலைஞர் திடலில் மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. உடன் கழக நிர்வாகிகள் தனச்செல்வம், மூவேந்திரன், அன்பழகன், மதிவெங்கடேஷ், சுதன், காவேரி, தவமணி, ஆர்.கே.ஜெயராமன், ராஜாமணி, அக்ரி கணேசன், ஆர்.கணேசன், வீர கணேசன் மற்றும் கழக நிர்வாகிகள் கழகத்தினர் பங்கேற்றனர்.